# சௌந்தர்ய மடல்

பெண்கள் மற்றும் குழந்தைகள் முன்னேற்றத்தினை
பிரதிபலிக்கும் காலாண்டு வெளியீடு [செப்டம்பர் 2011]

## மத்திய மருத்துவ தாவர நிறுவனத்துடன் ஒப்பந்தம்

தமிழகத்தில் மூலிகை மற்றும் நறுமணத் தாவர சாகுபடி மிகவும் குறைவாக உள்ளது. இவற்றை விவசாயிகள் சாகுபடி செய்ய விரும்பினாலும், விதைகளைத் தேர்வு செய்தல், சாகுபடி செய்யும் தொழில் நுட்பங்கள், இதற்கான அரசு உதவிகள் குறித்த விபரங்கள் விவசாயிகளுக்கு அதிகமாகத் தெரிவது இல்லை.

மத்திய மூலிகை, நறுமணத் தாவர நிறுவனத் தலைமையகம், லக்னோவில் உள்ளதால் விவசாயிகள் தொடர்புகொள்வதில் சிரமம் உள்ளது. இதை நிவர்த்தி செய்யும் பொருட்டு மத்திய மருத்துவ மற்றும் நறுமணத் தாவர நிறுவனம் ஒரு சேவை மையத்தினை காந்திகிராம அறக்கட்டளையில் துவங்க முன்வந்தது. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் காந்திகிராம அறக்கட்டளையில் 12–09–2011 அன்று கையெழுத்தானது.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் மருத்துவக் குணமுள்ள பயிர் வகைகளை வளர்த்தல், பதப்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ளும் வகையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மூலிகைப் பயிர்களைப் பயிரிடவும், நறுமணப் பயிர்கள் மற்றும் மண் தரப் பரிசோதனை ஆராய்ச்சி ஆய்வகம் கட்டுவதற்கும், நர்சரி ஏற்படுத்தவும் காந்திகிராம அறக்கட்டளை 2.1 ஏக்கர் நிலத்தை மத்திய நிறுவனத்திற்கு வழங்குவதற்கு பத்தாண்டிற்கான ஒப்பந்தம் செய்துள்ளது.

மத்திய மருத்துவ மற்றும் நறுமணத் தாவர நிறுவனத் தலைவர் திரு. ஆசிஸ் தத்தா அவர்கள் காந்திகிராம அறக்கட்டளையுடன் இணைந்து பணிபுரிவது சிறந்த வாய்ப்பாகக் கருதுகிறேன் என்றார்.

காந்திகிராம அறக்கட்டளைச் செயலாளர் திரு. கி. சிவக்குமார் அவர்கள், நாட்டிலேயே முதன் முறையாக இந்நிறுவனம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை காந்திகிராமத்துடன் செய்துள்ளது நமக்கு அரிய வாய்ப்பு கிட்டியுள்ளது. இதன் மூலம் இப்பகுதியில் உள்ள 100 விவசாயிகளுக்கு மருத்துவக் குணமுள்ள பயிர்கள் உற்பத்தி செய்வதற்கான பயிற்சி, விவசாய நிலத்தின் மண்மாதிரிப் பரிசோதனை, அரசு மானியம் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

மேலும் CIMAP நிறுவனத்தின் இயக்குநர் திரு. ராம்ராஜசேகரன் மற்றும் விஞ்ஞானிகள் பலரும் இதில் கலந்துகொண்டனர். இதில் சுற்றுப்புறக் கிராம விவசாயப் பெருமக்கள் 75 பேர் கலந்துகெண்டனர்.



# சாக்ரட்டீஸ்

நம்மில் சிலருக்காவது சாக்ரட்டீஸைப் பற்றி கொஞ்சம் தெரியும். ஏதென்ஸ் நகரின் கடைத்தெருவில் சில இளைஞர்களைக் கூட்டி அவர்களுடன் எதையாவது விவாதம் செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார் என்றும், அவரது குடும்ப வாழ்க்கை அவ்வளவு சுமுகமாக இல்லை என்றும் ஒரு கோப்பையில் விஷத்தைக் கொடுத்து அதை அருந்தும்படி நிர்ப்பந்திக்கப்பட்டார் என்றும் அதன் காரணமாகவே அவர் உயிர் பிரிந்தது என்றும் நாம் கேள்விப்பட்டிருக்கிறோம்.

மேலே குறிப்பிட்டுள்ள விபரங்கள் ஏறக்குறைய சரியானவைதான். மேற்கத்திய நாடுகளின் கலாச்சாரத்தின் தத்துவஞான அடிப்படையிலான அடித்தளம் கி.மு. 5வது 4வது நூற்றாண்டுகளில் சாக்ரட்டீஸ், பிளாட்டோ மற்றும் அரிஸ்டாட்டில் ஆகிய மூவரால் அமைக்கப்பட்டது. அறிவும் ஞானமும் சாதாரண மக்களையும் சென்றடைய வேண்டும் என்பதற்கான முயற்சி மனிதவரலாற்றிலேயே முதன் முதலாக பிளாட்டோவின் உரையாடல்கள் (டயலாக்ஸ்) வாயிலாக மேற்கொள்ளப்பட்டது. சாக்ரட்டீஸின் வாழ்க்கை பற்றிய விபரங்கள் நமக்கு இந்த உரையாடல்களிலிருந்தே கிடைத்துள்ளன.

பிளாட்டோவின் எழுத்துக்கள் இரண்டு வகையானவை. ஒன்று அவரது கல்லூரியில் படித்த மாணவர்களுக்காக அறிவியல் நடையில் எழுதப்பட்டது. மற்றது ஏதென்ஸ் நகரின் சாமானிய மக்களும் தத்துவ ஞானத்தின் மேன்மை பற்றி அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக எளிமையான உரையாடல் நடையில் எழுதப்பட்டது. வரலாற்றின் விதித்திரம் காரணமாக அவர் கல்லூரி மாணவர்களுக்காக எழுதிய இலக்கியம் காணாமல் போய்விட்டது. ஆனால், பாமரர்களுக்காக எழுதிய உரையாடல்கள் நமக்குக் கிடைத்துள்ளன. வேடிக்கை என்னவென்றால் இந்த உரையாடல்கள் காரணமாகவே பிளாட்டோ புகழ் பெற்றார்.

கி.மு. 490–470க்கு இடைப்பட்ட காலத்தில் டேரியஸ் மற்றும் ஸெர்க்ஸஸ் ஆகிய பாரசீக மன்னர்கள் கிரேக்க நாட்டை வெல்வதற்காக மேற்கொண்ட போர் முயற்சிகள் ஸ்பார்ட்டா மற்றும் ஏதென்ஸ் நகர்ப் படைகளால் முறியடிக்கப்பட்டன. யுத்தம் முடிந்ததும் படைகள் கலைக்கப்பட்டன. ஏதென்ஸ் நகரம் கடல் போருக்காக பயன்படுத்திய கப்பல்களை இப்போது வாணிபத்திற்காக பயன்படுத்தத் தொடங்கியது. வாணிபம் நன்றாகவே தழைத்தோங்கியது. ஏதென்ஸ் இப்போது மிகவும் சுறுசுறுப்பான துறைமுக நகரமாகவும் அங்காடியாகவும் உருவெடுத்தது. இந்நகரின் கடைத்தெருவில் பல்வேறு இனம் பல்வேறு மொழிகள் பல்வேறு பழக்கவழக்கங்கள், மதங்கள் சார்ந்த மக்களைக் காண முடிந்தது. இவ்வாறாக பலதரப்பட்ட மக்களுடன் தொடர்பு ஏற்படுத்திக்கொள்வதற்கும் அவர்களது கலாச்சாரம் பற்றி விவாதிப்பதற்குமான வாய்ப்பு இப்போது ஏதென்ஸ் நகர மக்களுக்கு கிட்டியது.

மக்களிடையே நிலவும் மரபுகள் – சம்பிரதாயங்கள் அவை சார்ந்த கோட்பாடுகள் எல்லாமே பலதரப்பட்ட மாற்றுக் கலாச்சாரம், நம்பிக்கை, மொழிகள், புதிய தகவல்களின் தாக்கம் காரணமாக மாற்றமடைகின்றன. ஏதென்ஸ் நகர மக்களுக்கும் பல்வேறு மதக் கோட்பாடுகளுடன் தொடர்பு ஏற்பட்டபோது அக்கோட்பாடுகள் சரியாக இருக்குமா என்பது பற்றி ஐயம் எழுந்தது. வியாபாரிகளுக்கு சந்தேகம் சற்று அதிகமாகவே இருந்தது. அவர்கள்தான் பல்வேறு மதத்தினரையும் பல்வேறு கலாச்சாரங்களையும் அதிகமாகச் சந்தித்தனர். வியாபாரிகளின் பார்வையில் ஏனைய மக்கள் இருதரப்பட்டவர்கள். ஒன்று முட்டாள்கள் அல்லது மோசடி செய்பவர்கள். அதனால்தான் தாங்கள் எதிர்கொள்ளும் மனிதர்கள் அவர்களது நம்பிக்கை பற்றி கேள்விகள் கேட்டனர். கொஞ்சம் கொஞ்சமாக அறிவியல் கணிதம் எல்லாமே இச்சூழலில்தான் தோன்றி வளர்ந்தன. கூடவே வானியல் மற்றும் கடல்பயணம் பற்றிய அறிவும் தோன்றி வளர்ந்தது. அந்த வணிகர்களிடம் செல்வம் சேர்ந்தபோது சற்று ஓய்வும் பாதுகாப்பான வாழ்வும் கிடைத்தன. இந்தச் சூழலில்தான் ஆய்ந்தறிதல் மற்றும் ஆராய்ச்சி மனப்பான்மைக்கான அடித்தளம் அமைகிறது. வான் கோள்களிடம் மக்கள் கடல்வழி மார்க்கம் பற்றிய கேள்விகள் தவிர உலக வாழ்க்கையின் புதிர்களுக்காக விடைகளையும் காண முற்பட்டனர். இதனால்தான் முதல் தலைமுறை சார்ந்த கிரேக்க தத்துவ ஞானிகள் எல்லோரும் வானியல் வல்லுநர்களாகத் திகழ்ந்தனர்.

அரிஸ்டாட்டிலின் கூற்றின்படி பாரசீகத்துடனான போரில் வெற்றிக்குப்பின் ஏதென்ஸ் நகர மக்கள் தங்களது சாதனை பற்றி இறுமாப்படைந்தனர். இப்போது அவர்கள் பல்வேறு துறைகளிலும் தங்களது அறிவை வளர்த்துக் கொள்வதற்கும் முற்பட்டனர். உலகில் பல்வேறு நிகழ்வுகளும் மாறுதல்களும் இயற்கைக்கு அப்பாற்பட்ட (தெய்வீக) சக்திகள் காரணமாகத்தான் தோன்றுகின்றன என்கிற நம்பிக்கை தளர்ந்து இயற்கைக்குட்பட்ட சூழலில் இந்நிகழ்வுக்கான காரணங்கள் பற்றிய சிந்தனை துளிர்க்கத் தொடங்கியது. இச்சிந்தனைதான் அறிவியலையும் தத்துவ ஞானத்தையும் மலரச் செய்தது.

சாக்ரட்டீஸ் அழகிய தோற்றம் கொண்டவர் அல்ல. வழுக்கைத் தலையையும் வட்டமான முகத்தையும் ஆழமான கண்களையும் பெரியதோர் மூக்கையும் பார்க்கும்போது அவர் ஒரு கூலித் தொழிலாளி போல் தோற்றமளித்தாரேயன்றி தத்துவ ஞானியைப்போல் தோற்றமளிக்கவில்லை. கோடை காலமானாலும் சரி குளிர் காலமானாலும்சரி அவர் ஒரே கோட்டைத்தான் அணிந்திருந்தார். காலணியை அவர் அணியவில்லை. அவரிடம் சட்டைகூட இல்லை. தான் அனுபவித்து வந்த ஆன்மீக சுதந்திரத்திற்காக அவர் தன்னைப் பலவிதத்திலும் வருத்திக் கொண்டு இன்னல்களை விலையாகக் கொடுத்தார்.

கோமாளிகள் போல் தோற்றமளித்த பலதரப்பட்ட இளைஞர்கடங்கிய கும்பல் ஒன்று அவரை எப்போதும் சூழ்ந்திருந்தது. இக்கும்பலுடனான அவரது உரையாடல்களிலிருந்துதான் ஐரோப்பிய தத்துவ ஞானம் தோன்றியது. இக்கும்பலில் பிளாட்டோ மற்றும் அல்ஸிபியாட்ஸ் போன்ற பணக்கார இளைஞர்கள் இருந்தனர். ஏதென்ஸ் நகரின் மக்களாட்சி பற்றி அவரது கிண்டலான அலசல் இந்த இரு இளைஞர்களுக்குப் பிடித்திருந்தது. சாக்ரட்டீசின் பற்றற்ற ஏழ்மை ஆண்டிஸ்தனிஸ் போன்ற சோஷலிஸ்ட் இளைஞர்களுக்குப் பிடித்திருந்தது. அந்த ஏழ்மையை அவர்கள் ஒரு மதமாகவே எண்ணினர். ஆர்ஸிப்டஸ் போன்ற அரசிலாக் கொள்கை (அனார்க்கி) வாதியும் அவரது மாணாக்கர்தான். இந்த மாணவர் ஆண்டானும் அடிமையும் இல்லாத ஒரு சமுதாயம் பற்றிக் கனவு கண்டு வந்தார். தனது குருநாதர் சாக்ரட்டீஸைப் போல தானும் கவலையற்றிருக்கவேண்டும் என்று ஆசைப்பட்டார். மனித சமுதாயத்தை இன்றைய காலகட்டத்தில் சூழ்ந்துள்ள அனைத்துப் பிரச்சனைகளுமே (அன்றைய சமுதாயத்திலும் அடிப்படைப் பிரச்சினைகள் அதேதான்) இந்த இளைஞர்களின் முடிவற்ற விவாதத்தில் அலசப்பட்டன. சிந்தனையாளர்களாகவும் பேச்சாளர்களாகவும் உருவெடுத்த இந்த இளைஞர்கள் வாதவிவாதம் இல்லாத வாழ்க்கை பயனற்றதாக இருக்கும் என்று எண்ணினார்கள். சமுதாயச் சிந்தனைகளின் ஒவ்வொரு கூறு பற்றியும் அறிந்திருந்த இளைஞர்கள் அங்கே இருந்தார்கள். இவ்வாறான சமுதாயச் சிந்தனைகளின் கூறுகளும் இங்குதான் தோன்றின என்று கூறலாம்.

அந்த குருநாதர் எப்படி வாழ்ந்தார் என்று யாருக்குமே தெரியாது. அவர் எங்குமே பணியாற்றவில்லை. அடுத்த நாளை பற்றி சிந்தனை அவருக்கு சுத்தமாகக் கிடையாது. அவரது சீடர்களிடமிருந்து தங்களுடன் உணவருந்தும்படி அழைப்பு வந்த போதுதான் அவருக்கு சாப்பாடு. நிறைய சீடர்கள் அவருக்கு விருந்தளித்து அளவளாவுவது ரொம்பவும் பிடித்திருந்தது என்பது சாக்ரட்டீஸின் உடல் வாகைப் பார்க்கும்போது தோன்றுகிறது. அவரது சொந்த வீட்டில் அவருக்கு வரவேற்பு கிடைக்கவில்லை என்றுதான் கூறவேண்டும். ஏனெனில் தனது மனைவியையும் குழந்தைகளையும் அவர் அம்போ என்று விட்டுவிட்டார். அவர் ஒரு உதவாக்கரை மற்றும் சோம்பேறி; குடும்பத்திற்கு அவப்பெயரைக் கொண்டு வந்தாரேயன்றி உணவைக் கொண்டுவரவில்லை என்று ஸாந்தியாப்பே சாக்ரட்டீஸ் பற்றி கூறுகிறார்.

மக்களுக்கு சாக்ரட்டீஸிடம் பிடித்த விஷயம் என்னவெனில் அவர் தம்மை அறிவாளி என்று பறைசாற்றிக்கொள்ளாததுதான். இவ்விசயத்தில் அவர் மிகவும் தன்னடக்கத்துடன் திகழ்ந்தார். அறிவைக் காதலுடன் தேடுபவராகவும், அவ்வாறு அறிவைத் தேடுவது தனது பொழுதுபோக்கு மட்டுமேயன்றி தான் அறிவாளி அல்ல என்றும் தன்னைக் காட்டிக்கொண்டார். தத்துவ ஞானம் தோன்றுவதே ஐயப்பாடு காரணமாகத்தான். குறிப்பாகத் தான் போற்றி வந்துள்ள நம்பிக்கைகள் பற்றியும் கோட்பாடுகள் பற்றியும் சில அடிப்படைக் கொள்கைகள் பற்றியும் ஒருவனுக்கு சந்தேகம் ஏற்படும் போதுதான் தத்துவ ஞானம் பிறக்கிறது. மனம் சற்றுப் பின்னோக்கிப் பயணித்துத் தன்னையே ஆய்வு செய்யும் தருணம் – ‘‘தன்னை அறிந்துகொள்’’ – என்கிற சூழலில்லாவிடில் தத்துவஞானமும் இல்லை.

கௌரவம், நன்னெறி, நேர்மை, தேசபக்தி போன்ற சொற்களின் பொருள் உங்களுக்குத் தெரியுமா? இது போன்ற கேள்விகளுக்கு உளவியல் மற்றும் நன்நெறி அடிப்படையிலான விடைகளைத் தேடுவதுதான் சாக்ரட்டீஸுக்குப் பிடித்திருந்தது. இதுபோன்ற ஒவ்வொரு வார்த்தைக்கும் துல்லியமான பொருள் விளக்கம், தெளிவான சிந்தனை மற்றும் சரியான அலசல் அவசியம் என்கிற சாக்ரட்டீஸின் கோரிக்கை பலருக்கும் சங்கடமாக இருந்தது. அவர் கேள்விக்கணைகளைத் தொடுக்கிறாரேயன்றி திருப்தியளிக்கக்கூடிய விடைகளைத் தராமல் மக்களைக் குழப்புகிறார் என்று பலரும் அவரைச் சாடினர். ‘‘நேர்மை என்று நாம் எதைக் குறிக்கிறோம்? (அதன் பொருள் விளக்கம்) மற்றும் எது மிகச்சிறந்த அரசு? (அரசமைப்பு) என்கிற மிகவும் கடினமான கேள்விகளுக்கு அவர் அளித்துள்ள சரியான விடைகள்தான் தத்துவ ஞானத்திற்கு அவர் விட்டுச்சென்றுள்ள உயில் சாஸனம்.

தான் வாழ்ந்த காலத்தின் மிகச்சிறந்த கூர்மையான அறிவாற்றல் பெற்றவராக இருந்தும்கூட பலதரப்பட்ட மனிதர்களுடன் – மந்த

புத்திபடைத்தவர்களும் இதில் அடக்கம் – சாக்ரட்டீஸ் காணப்பட்டார். என்று தாம்ப்ஸன் குறிப்பிடுகிறார். மிகப்புனிதமான நன்நெறி படைத்தவராக இருந்தும் கூட உணர்ச்சி வசப்படுபவர் போலவே காணப்பட்டார்.

தங்களை அறிவாளிகள் என்று எண்ணிய சில மனிதர்களுக்கு அறிவு என்றால் என்ன என்று விளக்கத் தெரியவில்லை. தனது அறியாமை பற்றிய அறிவு தன்னிடம் இருந்ததால்தான் அவர்களைக் காட்டிலும் தான் அறிவாளி என்று சாக்ரட்டீஸுக்குப் பட்டது. இந்தத் தகவலும் கிண்டலாகத்தான் அவரிடமிருந்து வெளிப்படுகிறது. கிரேக்க நாட்டின் பிரசித்தி வாய்ந்த டெல்ஃபி கோயிலில் வழங்கப்பட்டுவந்த அருள்வாக்கின் உண்மை நிலை பற்றி அவர் தீவிரமாக ஆய்வு செய்ய விழைந்தார். மாந்தர்களிடையே தங்களது அறியாமையைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் அவர்களது ஆத்மாவுக்கு எது நல்லது என்பது பற்றிய அறிவு மிக மிக முக்கியம் என்பதை அவர்களுக்கு உணர்த்துவதும் தனது வாழ்வின் குறிக்கோளாக இருக்கவேண்டும் என்பதே கடவுளின் விருப்பம் என்றும் அதற்காகவே நான் பிறவி எடுத்திருப்பதாகவும் அவர் நம்பினார். தனது இந்த மேலான பணியைத் துறப்பதைக் காட்டிலும் மரண தண்டனையை உடனடியாக ஏற்பதுதான் சரி என்று அவர் அறிவித்ததற்கு இதுதான் காரணம்.

அவரது செய்தியை பலரும் பல்வேறு விதமாகப் புரிந்துகொண்டார்கள். அவரது குத்தலான விமர்சனத்திற்கு ஆளானவர்கள் அவருக்குத் தீங்கு விளைவிக்க எண்ணினார்கள். வேறு சிலர் அவர் தேவையில்லாமல் மற்றவர்கள் விவகாரங்களில் தலையிடும் தன்மை கொண்டவர் என்று எண்ணினார்கள். பெரும்பாலான இளைஞர்களுக்கு சமுதாயத்தின் பெரிய மனிதர்களின் வாயை அவர் அடைத்துவிடுவது பிடித்திருந்தது. அல்ஸிபியாடஸ் மற்றும் கிரிட்டியாஸைப் பொருத்தவரை சாக்ரட்டீஸுடன் இணைந்தால், நீதிமன்றம், ஆய்வு மன்றம் மற்றும் சட்ட மன்றங்களில் திறமையாக வாதிடுவதற்குத் தேவையான அனுபவம் கிட்டும் என்று எண்ணினார்கள். வேறு சில இளைஞர்கள், அவருடன் இணைந்திருந்தால் வாழ்க்கையில் உண்மையைக் கடைப்பிடிப்பதற்கும் நல்லவன் என்று பெயர் வாங்குவதற்கும் சந்தர்ப்பம் கிடைக்கும் என்று எண்ணினர். இப்பண்புகள் காரணமாக தங்களது குடும்பங்களிலும், நண்பர்களிடையேயும், சமுதாயத்திலும் தங்களது கடமைகளைச் செய்து பராட்டுப் பெறலாம் என்றும் எண்ணினார்கள். இறுதியாக உள்வட்டத்தில் சாக்ரட்டீஸுக்கு உண்மையாகவே நெருக்கமாக இருந்த சில இளைஞர்கள் அவரது கொள்கைகளை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்வோம் என்று எண்ணினார்கள். ஆனாலும், பொதுப்படையாகப் பார்க்கும்போது அவர்களைச் சீடர்கள் என்று சொல்வதற்கில்லை. பொதுவாக சாக்ரட்டீஸின் அறிவும் நற்பண்புகளும் இந்த இளைஞர்களைக் கவர்ந்தன என்பது உண்மை. சமீபத்தில் நிகழ்ந்த போரில் ஏதென்ஸுக்கு எதிரியான சில நாடுகளைச் சார்ந்த இந்த இளைஞர்கள்தான் சாக்ரட்டீஸின் இறுதி நாளன்று அவரைச் சூழ்ந்திருந்தனர்.

கி.மு. 399–ம் ஆண்டில் தெய்வத்தை அவமதித்ததாகக் குறிப்பிட்டு அவர் மீது இரண்டு குற்றங்கள் சுமத்தப்பட்டன. முதலாவது குற்றம் இளைஞர்களை ஒழுக்கக் கேடான பாதையில் வழிநடத்தியது. இரண்டாவது குற்றம் நகர மக்கள் பக்தியுடன் வழிபட்ட தெய்வங்களை அவமதித்தது. இரண்டு குற்றச் சாட்டுகளும் நிரூபிக்கப்பட்டதாகக் கருதி சாக்ரட்டீஸுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

இந்த நிகழ்வுகளை எல்லாம் சாக்ரட்டீஸ் அலட்சியமாகப் பார்த்தார். தனது பிரதிவாதத்தில் தனது கடந்த காலச் செயல்கள் பற்றி அவர் அளித்த விளக்கம் மக்களுக்கும் அரசுக்கும் எதிராகச் செயல்பட்டதை ஊர்ஜிதப்படுத்துவது போலவே இருந்தது. அவர்மீது வழக்குத் தொடுத்தவர்களோ அவர் சாகக்கூடாது என்றுதான் விரும்பினார்கள். அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டபோதிலும், சட்ட ரீதியாக அவர் எதிர்ப்புத் தெரிவித்தால் அதனை ஏற்றுக்கொண்டு அவரை விடுதலை செய்துவிடலாம் என்பதுதான் வழக்குத் தொடுத்தவர்களின் நோக்கம். அவ்வாறாகத் தன்னைப் பாதுகாத்துக்கொள்வதற்கு எந்த வாதத்தையும் முன்வைக்க மறுத்ததுடன் சமரசத்திற்குத் தான் தயாரில்லை என்பதையும் தெளிவுபடுத்திவிட்டார். வழக்குத் தொடுத்தவர்கள் அவர் ஒரு துரோகியா அல்லது அவர் தானே கூறிவந்தபடி கடவுளின் தூதரா என்கிற கேள்விக்கும் விடை கேட்டிருந்தார்கள். இக்கேள்விக்கு சாக்ரட்டீஸ் விடையளிக்க மறுத்துவிட்டார். நீதிபதிகள் எந்த விபரத்தையும் தட்டிக்கழிக்காமல் நேரடியாகவே தீர்ப்பு வழங்கவேண்டும் என்பதில் சாக்ரட்டீஸ் உறுதியாக இருந்தார்.

கோப்பையிலிருந்த விஷத்தைப் பருகி அவர் உயிர்த் தியாகம் செய்தார்.

**எம்.ஆர். ராஜகோபாலன்**
நிர்வாக அறங்காவலர்
காந்திகிராம அறக்கட்டளை

## சௌபாக்ய இல்லம்

சௌபாக்ய இல்லக் குழந்தைகள் இல்லத்தில் இயங்கிவரும் கணினி மையம் திரு.வி.கிருஷ்ணமூர்த்தி அண்ணா அவர்களின் நினைவாக "வி.கே. அண்ணா கணினி மையம்" என்றும் இங்கு செயல்பட்டுவரும் நூலகத்திற்கு சௌபாக்ய இல்லத்தின் முதல் கண்காணிப்பாளர் சரளாம்மா நினைவாக "அன்னை சரளா நூலகம்" என்றும் பெயரிடப்பட்டுள்ளது.



உலக வங்கியின் சென்னை கிளையைச் சேர்ந்த திரு. சதீஸ் அவர்கள் ரூ.35,000/– வைப்பு நிதியாக வழங்கியுள்ளார். இதன் மூலம் பெறும் வட்டித் தொகையைக் கொண்டு குழந்தைகளுக்கு பொது அறிவு, ஓவியம் போன்ற போட்டிகள் நடத்தப்பட உள்ளது. இதன் மூலம் குழந்தைகளின் திறமைகளை வெளிக்கொணர இது வாய்ப்பாக உள்ளது. HAPP நிறுவனத்தின் பொது மேலாளர் திரு. புகழேந்தி அவர்கள் ரூ. 25,000/– நன்கொடை வழங்கி உள்ளார். முன்னாள் மாணவி செல்வி பாக்கியலட்சுமி ரூ. 15,000/– நன்கொடை வழங்கி உள்ளார். திருமதி கோதாவரி சுப்ரமணியம் அவர்களின் நினைவாக சௌபாக்ய இல்லத்தில் பெண்களுக்கு விடுதி கட்டுவதற்கு திரு. ஷீலாபோலர் ரூ.5,00,000/– அளித்துள்ளார்.

## கஸ்தூரிபா சேவிகாசிரமம் சிறப்பு மேனிலைப் பள்ளி

பள்ளி சிறப்புக் கட்டணநிதியிலிருந்து ரூ. 20,000/– மதிப்பில் அறிவியல் ஆய்வுக்கூடம் அமைப்பதற்குத் தேவையான உபகரணங்கள் வாங்கப்பட்டுள்ளன.

மதுரை அரவிந்த் கண் மருத்துவமனை நடத்திய இலவச கண்சிகிச்சை முகாமில் மாணவிகள் கலந்துகொண்டனர் கண் பரிசோதனை செய்யப்பட்ட ஒன்பது மாணவிகளுக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

டாக்டர் சௌந்தரம் சமுதாயக் கல்லூரி நடத்தும் CLP பயிற்சியில் சேர்ந்து இதுவரை 100 மாணவிகளும் 3 ஆசிரியைகளும் பயிற்சி பெற்றுள்ளனர். தற்போது 6 மாத படிப்பில் 20 மாணவிகள் சேர்ந்து படித்து வருகின்றனர்.

## டாக்டர் டி.எஸ். சௌந்தரம் மெட்ரிக் பள்ளி

இப்பள்ளியின் புதிய முதல்வராக திருமதி. R.லேமோரினா அவர்கள் பெறுப்பேற்றுள்ளார். மதுரை வானொலி நிலைய நிகழ்ச்சிக்காக இப்பள்ளி மாணவ, மாணவியரின் பல்சுவை நிகழ்ச்சி ஒன்றினை பதிவு செய்து சென்றுள்ளனர்.



ரவீந்திரநாத் தாகூரின் 150–வது பிறந்த நாளை முன்னிட்டு வாழ்நாள் அறங்காவலர் டாக்டர் ஆர். கௌஸல்யாதேவி, அவர்கள் தலைமையில் மரம் நடுவிழா நடைபெற்றது. மேலும், மாணவ மாணவியருக்கு ஓவியப் போட்டி, கட்டுரைப் போட்டி. பேச்சுப் போட்டி நடைபெற்றது. வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

## காந்திகிராம தொடக்கப் பள்ளி

திருமதி இரா. ராசி ரேணுகா தேவி அவர்கள் பள்ளிக்கு புதிய ஆசிரியையாக நியமனம் செய்யப்பட்டுள்ளார். திண்டுக்கல் ரோட்டரி சங்கம் மூலம் 10 ஏழை மாணவியர்களுக்கு சீருடைகள் வழங்கப்பட்டன. காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் பேராசிரியர் திரு. செந்திவேல் அவர்கள் ஏழை மாணவர்களுக்கு 50 நோட்டுகள் வாங்கித் தந்துள்ளார்.

ஆசிரியயைகளுக்கு SSA மூலம் மதிப்பீடு பற்றிய பயிற்சிகள் நடத்தப்பட்டன.

## தம்பித் தோட்டம் மேனிலைப்பள்ளி

இப்பள்ளியின் முன்னாள் மாணவர் திரு. C.K.A. ரத்னவேல் ரூ.1,10,000/– அன்பளிப்பாக அளித்துள்ளார். மாணவ மாணவியர்களுக்குச் சுத்தமான, பாதுகாப்பான குடிநீர் வழங்குவதற்காக இந்நிதியிலிருந்து RO System பள்ளியில் பொருத்தப்பட்டுள்ளது.

கிராம விரிவாக்கப் பணிக்கான சாரணர் இயக்க மாணவியர், திருமலைக்கேணியில் ஏற்பாடு செய்யப்பட்ட

மூன்று நாட்கள் முகாமில் கலந்துகொண்டனர். திண்டுக்கல் குயின் சிட்டி ரோட்டரி சங்கம் 10–ஆம் மற்றும் 12–ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் முதலிடம் பெற்ற மாணவர்களுக்கு ரூ.1000/–யும் கைக்கடிகாரமும் வழங்கினர். மாவட்ட ஆட்சியர் அவர்கள் முதல் மதிப்பெண் பெற்ற மாணவ மாணவியரை ஊக்கப்படுத்தும் பொருட்டு ரூ. 1000/– பண முடிப்பு வழங்கியுள்ளார்.

## கதர் அறக்கட்டளை

ஆண்டுதோறும் கதர் அறக்கட்டளையின் மூலம் சிறந்த கைவினைஞர்களைத் தேர்வு செய்து V.P. அண்ணா நினைவு நாளன்று கௌரவிக்கப்பட்டு வருகின்றனர். இந்த ஆண்டு T. சுப்புலாபுரம் உற்பத்தி மையத்தைச் சேர்ந்த நெசவாளர் திருமதி M. பாண்டியம்மாள், மற்றும் A.வெங்கடாபுரத்தைச் சேர்ந்த



நூற்பாளர் திருமதி நல்லம்மாள் ஆகியோர் சிறந்த கைவினைஞர்களாக தேர்வு செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். மேலும், இந்த ஆண்டு மஸ்லின் சேலைகளில் புதிய டிசைன்களை அறிமுகப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு பணிபுரிந்த நெசவாளர்களையும் ஊக்குவிக்கும் பொருட்டு அனைவரும் கௌரவிக்கப்பட்டனர்.

## லெட்சுமி சேவா சங்கம்

வேலூரில் உள்ள தமிழ்நாடு பாரம்பரிய சித்த வைத்திய மகா சங்கத்தின் சார்பாக நடைபெற்ற வர்ம வைத்தியர்கள் கூட்டத்தில் விற்பனைப் பிரதிநிதிகள் கலந்துகொண்டு விற்பனை மற்றும் விளம்பரம் செய்துள்ளனர். மேலும் வைத்தியர் K.P. அர்ஜுனன் அவர்கள் உற்பத்தி நுணுக்கங்களைக் கற்றுத்தருவதற்காக நான்கு பணியாளர்களைப் பயிற்சிக்காக வேலூர் அழைத்துச் சென்றுள்ளார்.



தஞ்சாவூர், திருச்சி, நாகபட்டினம், திருவாரூர், திருப்பூர் மற்றும் கோயமுத்தூர் ஆகிய மாவட்டங்களுக்கு வேன் மூலம் மருந்துகள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. பார்வதி கலைக்கல்லூரியில் சுயஉதவிக்குழுக்களின் மூலமாக மருத்துவ முகாம் ஒன்று நடத்தப்பட்டது. Dr.லதாகோமதி BAMS அவர்கள் புதிய மருத்துவராகவும் Dr.P.மாலதி BSMS. மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## அலைபேசியின் மூலம் கிராமத் தகவல் தொடர்புகள்

காந்திகிராம அறக்கட்ளையின் கீழ் இயங்கிவரும் கிராம விரிவாக்கத்துறையின் மூலம் வட்டார அளவிலான ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்திலிருந்து திரு. முகம்மது அலி, திரு. ஸ்ரீநாத், திருமதி சுமதி மற்றும் செம்பட்டியில் உள்ள சுவாமிநாதன் ஆராய்ச்சி மையத்திலிருந்து திரு. ஆனந்த், திரு. பிரிட்டோ மற்றும் காந்திகிராம அறக்கட்டளையின் விரிவாக்கப்பகுதி இயக்குநர் திருமதி இரா. இரேவதி ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் சுயஉதவிக்குழு பெண்களிடையே கல்வி, தொழில், விவசாயம், வேலைவாய்ப்பு, சுகாதாரம் மற்றும் உடல்நலம் குறித்த தகவல்களை எவ்வாறு அலைபேசியின் உதவியுடன் தெரிந்துகொள்ள முடியும் என்பது பற்றி திரு. முகமது அலி, திரு. ஸ்ரீநாத் மற்றும் திருமதி சுமதி ஆகியோர் எடுத்துரைத்தனர். கிராமப்புறப் பகுதியில் உள்ள மக்களுக்கு அன்றாட நாட்டு நிலவரம் பற்றிய தகவல்கள் சென்றடைவது குறைவு. தற்போது அனைவரிடமும் அலைபேசி உள்ளது. எனவே, வாரத்திற்கு ஐந்து முறை 535443 என்ற எண்ணிற்கு அழைப்பு விடுத்தால் சென்னையிலுள்ள சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தில் இருந்து மக்களுக்குத் தேவைப்படும் கருத்துக்கள் / செய்திகள் அனைத்தும் தெரிவிக்கப்படும். இத்தகவல்களைத் தெரிந்துகொள்ள ஏர்டெல் நிறுவனம்

வழங்கும் சிம் கார்டு மட்டுமே பயன்படுத்த வேண்டும் அல்லது இஃப்கோ கிரீன் சிம் கார்டு (Iffco Green Sim Card) வாங்கிப் பயன்படுத்தலாம். தகவல் பெறும் வாய்ப்பினை அலைபேசியின் வாயிலாகத் தெரிந்துகொள்ள முடியும் என்பதனைத் தெரிவிக்கும் நோக்குடன் இக்கூட்டம் நடைபெற்றது. இதில் சுமார் 150க்கும் மேற்பட்ட சுயஉதவிக்குழுப் பெண்கள் கலந்துகொண்டனர்.

## மாற்றுத் திறனாளர்களின் பொருளாதார முன்னேற்றம்

மாற்றுத்திறனாளர்களுக்கான சமூகம் சார்ந்த மறுவாழ்வுத் திட்டம் திருநெல்வேலி மாவட்டம் கடையம் வட்டாரத்தில் செயல்பட்டு வருகிறது.

இளங்கலைப் பட்டப்படிப்பு பயிலும் மகேந்திரன் என்ற மாணவன் முழங்காலுக்குக் கீழ் நடக்க முடியாது. அடுத்தவர் உதவியுடன் கல்லூரிக்குச் சென்று வந்தார். தற்போது இத்திட்டத்தின் உதவியுடன் கன்னியாகுமரி மைலாடியில் உள்ள குழந்தைகளுக்கான Ortho மையத்தில் இலவச அறுவை சிகிச்சை பெற்று தற்போழுது தானாக நடக்க முடிகின்றது. இவர் தானாகவே கல்லூரிக்குச் சென்று வருகிறார் என்பதைப் பார்க்கும்போது அவருக்கு இத்திட்டத்தின் மூலம் மறுவாழ்வு ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.



மேலும், இதே பகுதியைச் சேர்ந்த திருமதி பொன்மதி என்ற 35 வயது பெண்ணிற்கு இரண்டு கண்களும் தெரியாது இவருக்கு வயர் கூடை பின்னும் பயிற்சி இத்திட்டத்தின் மூலம் அளிக்கப்பட்டது. முன்பு அம்மாவிற்கு பீடி இலைகளை மட்டும் உருட்டிக் கொடுத்துவந்தார். பயிற்சிக்குப் பின் இவர் ஒரு நாளைக்கு ரூ. 60 வருமானம் கிடைக்கும் அளவிற்கு வயர் கூடை தயார் செய்து விற்பனை செய்கின்றார். இவரது முயற்சியாலும், நம்பிக்கையினாலும் தனது வாழ்க்கைக்குத் தேவையான பொருளாதாரத்தை தேடிக்கொள்கிறார்.

## NCRI கிராமப்புற இளைஞர்களுக்கான விழிப்புணர்வு முகாம்

மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத் துறையின் கீழ் உள்ள ஊரக நிறுவனங்களுக்கான தேசிய கவுன்சில் உதவியுடன் கிராமிய இளைஞர்களை உருவாக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் கிராமப்புற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கிடவும் கதர் கிராம கைத்தொழில் பொருட்களை விற்பனை செய்திடவும் பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக திருவண்ணாமலை மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள கொத்தமங்கலம் ஆகிய இரு இடங்களில் சித்தா மற்றும் ஆயுர்வேத மருந்துகள் விற்பனை முகாம் நடத்தப்பட்டது. இம்முகாமில் கிராமப்புற உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதால் கிராமப் பொருளாதாரம் முன்னேறுவதற்கு அது ஒரு வாய்ப்பாக அமைந்தது. மேலும், சித்தா மற்றும் ஆயுர்வேத மருந்துகளின் முக்கியத்துவம் பற்றி எடுத்துரைக்கப்பட்டது. இதில் லெட்சுமி சேவா சங்கத்தில் பணிபுரியும் சித்தா மற்றும் ஆயுர்வேத மருத்துவர்கள் கலந்துகொண்டு மருந்தகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.




மேலும், இவர்கள் திறம்பட வேலை செய்வதற்கு தொடர் கவனிப்பாக அனைவரையும் அழைத்து அவர்களுக்கு விற்பனையில் ஏற்படுகின்ற பிரச்சினைகள் சந்தேகங்களுக்கு தக்க ஆலோசனை வழங்கப்பட்டு வருகின்றது.

## தரமான கல்வித் திட்டப் பயிற்சி முகாம்

தரமான கல்வித் திட்டம் களக்காடு பகுதியில் 12 பள்ளிகளில் காந்திகிராம அறக்கட்டளையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அத்திட்டத்திற்கான பணியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு இரண்டு நாள் பயிற்சி ILP திட்ட மேலாளர் திரு. A.L.ரெங்கராஜன் மற்றும் காந்திகிராமம்



மனிதவளமேம்பாடு இயக்குநர் முனைவர் கே. வாசுகி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இப்பயிற்சியில் அடிப்படைக்கல்வி, திட்டத்தின் நோக்கம், செயல்பாடுகள் மற்றும் திட்டத்தினை நடைமுறைப்படுத்துதல் போன்றவை குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

## ஆதாரக்குழு

காந்திகிராம அறக்கட்டளையின் ஒரு முக்கிய அங்கமாக ஆதாரக்குழு இயங்கிவருகிறது. இக்குழுவானது காந்திகிராம அறக்கட்டளையின் செயல்பாடுகள் மென்மேலும் சிறப்படையும் பொருட்டும், புதிய யுக்திகளைக் கொண்டு அனைத்து அலகுகளும் செயல்படவும் உறுதுணையாக இருந்துவருகிறது. அறக்கட்டளையின் ஒவ்வொரு அலகின் செயல்பாடுகள் புதிய முயற்சியோடு புதிய யுக்திகள் மற்றும் ஐந்து ஆண்டுக்கான செயல்வழித் திட்டம் ஆகியவை ஆலோசகர் திரு. V.C.நடராஜன் அவர்களைக் கொண்டு பல கூட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.



இதன் முயற்சியாக ஒவ்வொரு அலகும் தங்களது பணிகளுக்கான மூன்று அல்லது ஐந்து ஆண்டிற்கான பணிகளை திட்டமிட்டு செயல்படுத்த முயற்சி மேற்கொண்டுள்ளனர்.

## மனிதவள மேம்பாடு

காந்திகிராம அறக்கட்டளையில் மனிதவள மேம்பாடு பிரிவு இயங்கி வருகிறது. இப்பிரிவு ஓராண்டினை நிறைவு செய்து இரண்டாவது ஆண்டில் அடியெடுத்துவைத்துள்ளது. இப்பிரிவு காந்திகிராம அனைத்து அலகுகள் மற்றும் பள்ளிகளில் நடத்தப்படுகின்ற விழாக்களில் பங்கு கொண்டு சிறப்பாக நடைபெற உதவுகிறது. கலாச்சாரக்குழு, ஆதாரக்குழு மற்றும் வாசகர் வட்டம் ஆகிய குழுக்களை ஒருங்கிணைத்து திறம்பட செயல்பட வழிவகுத்து வருகின்றது. ஊழியர்களின் நலனுக்காக ஆலோசனைப் பெட்டிகள் ஒவ்வொரு அலகிலும் பொருத்தப்பட்டுள்ளன. மேலும் 246 ஊழியர்களுக்கு ஜனதா விபத்து காப்பீடு செய்ய ஏற்பாடு செய்துள்ளது.

சிவசைலத்தில் உள்ள அவ்வை ஆசிரமம் மற்றும் சாந்திப் பள்ளியில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஆதாரக்குழுக்களை மாதந்தோறும் கூடுவதற்கு ஏற்பாடு செய்வதோடு அத்துறை பணியாளர்களும் கலந்து கொள்கின்றனர்.



*(For Private Circualtion Only)*

*Editor :* **Smt. N. Ramuthai, Smt. R. Revathi, Smt. Meenakshi**

*June 2007* Gandhigram Trust, Gandhigram - 624 302

**Phone** : 0451 - 2452326 & 2452400 **Fax** : 0451 - 2453347

**e_mail** : ggmtrust@sify.com **www.** gandhigram.org

***Printed at :*** **Dr. Soundram Trust, Gandhigram Press,** Gandhigram - 624 302, Telefax : 0451 - 2453347